12.02.2026 பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 170 /2019 ) திரு.ஜெயக்குமார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) நான் தற்சமயம் எங்கு குடியிருக்கிறேன் என்றால் அகிலாண்டபுரத்தில் குடியிருக்கிறேன். வாதி வழக்கு தாக்கல் செய்யும் போது நான் கட்சியாக இருந்தேனா என்றால் ஆமாம். வழக்கில் தன்னை தரப்பினராக சேர்க்கக்கோரி மனு கொடுத்து தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஜெயகுமார், லலித்மோகன், உமாமகேஸ்வரி, முருகேசன் ஆகியோர்கள் என்று வாரிசுகள் என்று கேட்டுள்ளார்கள். வாதி வழக்கு போட்டுள்ள விவரத்தை முருகேசன் தான் சொன்னார் என்றால் எனது வழக்கறிஞர் சொன்னார். வாதி என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் என்ன வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது. எனது தகப்பனார் பெயர் மாரித்துரை என்றால் சரிதான். எனது தாயார் பெயர் செல்வதுரைச்சியம்மாள் என்றால் சரிதான். வாதி துரைராஜும் எனது தாயாரும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் சிவநாராயணசாமி ரெட்டியார் என்றால் சரிதான். அவரின் முதல் மனைவியின் பெயர்சீதாலட்சுமியம்மாள் என்றால் சரிதான். முதல் மனைவிக்கு பிறந்தவர்கள் தான் எனது தாயாரும், வாதி துரைராஜ் என்றால் சரிதான்.சிவநாராயணசாமி ரெட்டியார் முதல் மனைவி சீதாலட்சுமியம்மாள் உயிருடன் இருக்கும் போதே 2 வது திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 2 வது மனைவி பெயர் ராஜாத்தியம்மாள் என்றால் சரிதான். ராஜாத்தியம்மாளுக்கு பிறந்தவர் தான் 3 ம்பிரதிவாதி முருகேசன் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் லலிதா,உமாமகேஸ்வரி ஆகியோர்கள். உமாமகேஸ்வரி திருமணம் ஆகாமலே இறந்துவிட்டார் என்றால் சரிதான். லலிதா உயிருடன் இருக்கிறாரா என்றால் இறந்துவிட்டார். லலிதாவுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஒரே மகன் தான் லலித்மோகன். 28.08.2012 ல் முருகேசன், நான், துரைராஜ் ஆகியோர்கள் சிவநாராயணசாமிக்கு வாரிசு என்று கோரி வாரிசு சான்று எடுத்தவிவரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்று தான் முருகேசன் எடுத்த வாரிசு சான்று என்றால் சரிதான். மேற்படி வாரிசு சான்றிதழ் முருகேசன் என்பவர் தான் மனு தாக்கல் செய்து எடுத்துள்ளார் என்றால் சரிதான்.

2) மேற்படி வாரிசு சான்றிதழில் என்னை வாரிசாக சேர்த்தது தவறு என்று வாதி கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தவிவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம்காட்டப்படும் வா.சா.ஆ.7 கோட்டாட்சியர் உத்தரவு எனக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் எனது பெயரும் அந்த உத்தரவில் காண்பிக்கப்பட்டள்ளது என்றால் சரிதான் எனக்கு வரவில்லை. கோட்டாட்சியர் அலுவலகம் சென்று அந்த மனுவிற்கு நான் கட்சிசெய்யவில்லை என்றால் செய்யவில்லை அந்த விவரம் எனக்கு தெரியாது. கோட்டாட்சியர் மேற்படி வாரிசு சான்றிதழை ரத்து செய்ததன் அடிப்படையில் 3ம்பிரதிவாதி தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலருக்கு மேல்முறையீடு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.8 மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு எனக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் பெயர் உள்ளது ஆனால் எனக்கு அனுப்பப்படவில்லை. கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வழக்கு விவரமும் எனக்கு தெரியும் என்றும் வருவாய் அலுவலர் அலுவலகத்தில் நடைபெற்ற வழக்கு விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் வேண்டுமென்றே தெரியாது என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது காண்பிக்கப்படும் வா.சா.ஆ.11 நான் எனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் சொத்து எனக்கு பூர்வீகமாகப்பாத்தியப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ல் 1/3 பங்கை கொடுத்து தான் எனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 2012 ல் வழங்கப்பட்ட வாரிசு சான்றிழை மையமாக வைத்து தான் மேற்படி சொத்தில் 1/3 பங்கு உள்ளதாக கூறி மேற்படி ஆவணத்தை எனது மனைவி பெயரில் எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 2012 ல் எடுத்த வாரிசு சான்றிதழில் லலித்மோகனை வாரிசாக காட்டவில்லை என்றால் காட்டவில்லை.எதற்காக லலித்மோகனை வாரிசாக காட்டவில்லை என்றால் அன்றைக்கு காட்டவில்லை. இன்றைக்கு காட்டியுள்ளோம் என்றால் சரிதான். 2012 ல் லலித்மோகன் வாரிசாக இல்லை என்றும் தற்போது வாரிசா என்றால் எது சரி என்றால் அன்றைய தினம் தவறுதலாக எடுத்துவிட்டோம். நாங்கள் தவறுதலாக வாரிசு சான்று எடுத்துவிட்டதாக வாதி எடுத்த நடவடிக்கை சரிதான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 ஆவணம் 23.06.2014 ல் எனது மனைவி சகுந்தலாவிற்கு ஒரு

ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் பிரிவின்றி பேர்பாதி என்றுஎனது மனைவி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

3) நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலம் தயார் செய்வதற்க்கு வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தது யார் என்றால் முருகேசன் கொடுத்தார்.முருகேசன் ஏற்பாட்டின் பேரில் தான்இந்த வழக்கில் ஆஜராகியுள்ளேன் என்றால் சரிதான். நான்,சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடையான வாரிசு கிடையாது என்றும் நான் மகள் வழி வாரிசு என்று சொன்னால் சரிதான் எனது தாயார் இறந்த பின்னர் நான் தான் வாரிசு. எனதுதகப்பனார் வழியில் தான் வாரிசாக நேரிடையாக வரமுடியும்என்றாலும் எனதுதாயர் வழியில் நேரிடையான வாரிசாக வரமுடியாதுஎன்றால் சரியல்ல. லலித்மோகன் எனது சகோதரியின் மகன் என்றால் சரிதான். சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு லலித்மோகன் மகள் வழி கொள்ளுப்பேரன் என்றால் சரிதான். நானும் லலித்மோகனும் சிவநாராயணசாமி ரெட்டியாருக்கு நேரிடையான வாரிசாக வரமாட்டோம் என்றால்சரியல்ல. சிவநாராயணசாமி ரெட்டியாருக்கும் வாதியும், 3ம்பிரதிவாதியும் தான் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல. நான் மற்றும் லலித்மோகன் நேரிடையான வாரிசாக வராததால் என்னுடைய எதிர்கோரிக்கை தள்ளுபடி செய்யவேண்டியதுஎன்றால் சரியல்ல. நானும், 3ம்பிரதிவாதி முருகேசனும் சிவநாராயணசாமி ரெட்டியாரின் சொத்துக்களை மோசடியாக பெறுவதற்காக வேண்டி தான் 2012ல் வாரிசு சான்று எடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நானும்,முருகேசனும் சேர்ந்து வாதிக்கு கிடைக்கக்கூடிய பங்கை மோசடி செய்யவேண்டிதான் இந்தவழக்கில் ஆஜராகி பொய்யாக கட்சிசெய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியபடி வழக்கினை அனுமதிக்க எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் சரியல்ல. நானும்,முருகேசனும் வாதியின் பங்கை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தின் படி வா.சா.ஆ.9 முதல் 12 வரையிலான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
12.02.2026.